சென்னையை அடுத்த பெருமாள்பட்டில் உள்ள ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் வெள்ளி விழா ஆண்டு (09/03/2019) சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

செயலாளர் மற்றும் அரங்காவலர் திரு. M.D.G கிராஜ்குமார் வரவேற்புரையாற்றினார். தாளாளர் முனைவர் R. நாராயணசாமி முன்னிலைவகுத்து பொருளாதார ரீதியில் பலவீனமான மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கு பொதுநல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. அறங்காவலர்கள் முனைவர் P. கோவிந்தராஜுலு மற்றும் திருமதி கஸ்தூரி பார்த்த சாரதி ஆகியவர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று இவ்விழாவை சிறப்பித்தனர். மற்றும் முதல்வர் முனைவர் S. R. கண்ணன் வெள்ளிவிழா ஆண்டு அறிக்கையைஎடுத்துரைத்தார்.

தலைமை விருந்தினராக பேராசிரியர் முனைவர் M.K சூரப்பா துணை வேந்தர் அண்ணாபல்கலைகழகம் சென்னை இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இக்கல்லூரியின் நிறுவனத் தலைவரின் சமூக சேவையை பற்றி பாராட்டி பேசினார். மேலும் அவர் மாணவர்களுக்கு பொறியியல் கல்லூரியின் மீது உள்ளார்ந்த சிந்தனையை வலியுறுத்தினார்.

மக்களுக்கு தொழில் நுட்பரீதியான தேவைகளை நிறைவேற்றுவதற்க்கு மாணவர்கள் முன்னெடுத்து செயல்பட வேண்டும். மேலும் அவர் மாணவர்களுக்கு கணினி அறிவு கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று கூறினார். மாணவர்கள் அவர்களின் பாடங்களை நன்கு புரிந்து கற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

இறுதியாக தலைமை விருந்தினர் அண்ணாபல்கலைகழ-கத்தின் ரேங்க் பட்டியலில் உள்ள மாணவர்களுக்கும், அக்கடமிக் டாப்பர்ஸ் மற்றும் விளையாட்டுதுறையில் சாதனை படைத்தவர்களுக்கும், தங்க பதக்கமும், பரிசுகளும், விருதுகளும் வழங்கினார். மேலும் ஊழியர்களின் நீண்டகால சேவைக்காக விருதுகள் வழங்கப்பட்டன.